எனது இலக்கம்: කා.සේ.සේ./V16/බහු.කා.සහයකයින් ඒ.සේ.බඳවා.
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2023.06.01

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்

**பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பயிற்சிபெற்ற பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர்களுக்கு අමප/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க அலுவலக உதவியாளர் சேவையில் நிரந்தர நியமனம் வழங்குவதற்குத் தகவல்களைப் பெறுதல்**

22/1353/605/011 ஆம் இலக்க 2022.09.12 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.12.30 ஆம் திகதிய மூன்றாவது இடைக்கால அறிக்கையிலுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ள අමප/23/0160/605/012 ஆம் இலக்க 2023.02.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் PSC/EST/03-01-01/01/2022 ஆம் இலக்க 2023.04.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதி என்பவற்றின் அடிப்படையில் பலநோக்கு அபிவிருத்திச் செயலாற்றுகைச் செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள பயிற்சி பெற்ற பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர்களை, இணைந்த சேவையின் கீழுள்ள அலுவலக உதவியாளர் சேவையிலுள்ள பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், அவ்வாறு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

I. உங்கள் அமைச்சில்/ திணைக்களத்தில் உள்ள இணைந்த சேவையின் கீழான அலுவலக உதவியாளர் சேவையிலுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழு அனுமதி வழங்கியிருத்தல் வேண்டும்.

II. சேவைகளுக்கான தேவை மற்றும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக குறித்த திணைக்களத் தலைவர்கள் திருப்தியடைந்த பின்னர் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

III. அனைத்து ஆட்சேர்ப்புக்களும் 2022.12.31 ஆம் திகதியில் அனுமதிக்கப்பட்டவாறான பதவியணி வரையறைக்குள் அமைதல் வேண்டும்.

IV. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**

அரச சேவை ஆணைக்குழுவினால் பலநோக்கு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆரம்பநிலை தொழில்நுட்பம் அல்லாத வகுதிக்குரிய பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர் (PL-01) பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு இணங்க அபிவிருத்திப் பணி உதவியாளர்களை, அரச சேவையில் ஆரம்ப மட்ட சேவை வகுதியின் (PLO1) பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பின்வருமாறு.

**கல்வி**

a. தரம் 8 (ஆண்டு 9) வரையில் கல்வி கற்றிருத்தல் அல்லது க.பொ.த. *(சாதாரண தரப்)* பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையத் தவறியிருத்தல் அல்லது அதனை விடக் குறைந்த கல்வித் தகைமையைப் பெற்றிருத்தல்.

**ஏனையவை**

b. 06 மாத காலம் தொடர்ச்சியான மற்றும் முறையான சேவை உள்வாங்கல் மற்றும் சேவைக் காலப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

c. மூன்றாம் நிலை, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமை (NVQ 3) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

d. நிரந்தர நியமனத் திகதியில் *45* வயதுக்கு மேற்படாதவராக இருத்த வேண்டும்.

அதற்கிணங்க உங்கள் அமைச்சின்/ திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவரும் வேறு அமைச்சொன்றின்/திணைக்களமொன்றின் உத்தியோகத்தரொருவரும் அடங்கிய மூன்று பதவிநிலை உத்தியோகத்தர்கள் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர் பதவிக்கு அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளனவா என்று பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

V. மேற்குறித்த தகைமைகளை எல்லா வகையிலும் பூர்த்தி செய்துள்ள நிரந்தர நியமனத் திகதியிலும் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர்களுக்கு மாத்திரமே நிறுவனத் தலைவர்களால் தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வேண்டும். தற்காலிக நியமனக் கடிதத்திற்கான படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 01).

ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தனித் தனியான கோவைகளைத் தயாரித்து முறையான நியமனம் வழங்குவதற்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தையும் (இணைப்பு 02) பூர்த்தி செய்து இணைந்த சேவை பணிப்பாளர்

நாயகத்திற்கு அனுப்ப வேண்டும். கோவைகளைத் தயாரிக்கும் போது இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

<u>குறிப்பு</u>

**45 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பான செயற்பாடுகள் அரச சேவை ஆணைக்குழுவில் விசாரித்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனால், அது தொடர்பில் தனித் தனியாக கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

02. இணைந்த சேவையின் அலுவலக உதவியாளர் சேவைக்கான விருப்பத்துக்குரிய சேவை நிலையங்களாகக் கருதப்படும் சேவை நிலையங்களுக்கு இதன் கீழ் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படக் கூடாது.

03. மேற்குறித்த விதத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத பலநோக்கு அபிவிருத்திப் பணி உதவியாளர்களுக்கு முறையான நியமனங்களை வழங்க முடியாது என்பதனால், தற்காலிக நியமனங்கள் வழங்கும் போது குறித்த தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக நீங்கள் தனிப்பட்ட முறையில் திருப்தியடையவது அவசியமாகும்.

04. தற்காலிக நியமனக் கடிதம் வழங்கி 01 மாதம் முடிவடைவதற்கு முன்னர் நிரந்தர நியமனக் கடிதம் வழங்குவதற்குத் தேவையான ஆவணங்களை இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்குமாறும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்

தொலைபேசி : 0112694560
தொலைநகல் : 0112690100
மின்னஞ்சல் முகவரி : oes.pubad@gmail.com

பிரதி *:*

01. தலைவர், அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழு

தற்காலிக நியமனக் கடிதம்

இணைப்பு 01

எனது இலக்கம் :-

............................ அமைச்சு / திணைக்களம்

கொழும்பு.

2023. ஆந் திகதி.

............................................................ஊடாக,

............................................................ திரு/திருமதி/ செல்விக்கு.

தே.அ.அ.இலக்கம்:- ..................................................................

<u>அலுவலக உதவியாளர் சேவையின் தரம் IIIஇன் பதவிக்கு நியமித்தல்.</u>

இலக்கம் அமைப/23/0160/605/012 மற்றும் 2023.02.07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் இலக்கம் PSC/EST/03-01-01/01/2022 மற்றும் 2023.04.10 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் படி ............ ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் நீர் அலுவலக உதவியாளர் சேவையின் தரம் III ......................... இன் பதவியில் நியமனம் செய்கிறேன்.

02. இது தற்காலிக நியமனக் கடிதம் என்பதோடு, குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின், முறைசார்ந்த நியமனக் கடிதம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் உரிய காலத்தில் வழங்கப்படும். அவ்வாறில்லையெனின், இந்த நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

03. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும் மற்றும் அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் பிற நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கும், தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

04. இந்த பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் - ரூபா. 24,250 - 10x250 - 10 x 270 - 10 x 300 - 12 x 330 - 36,410 ரூபாவாகும். 2016.02.25 ஆந் திகதி இலக்கம் 03/2016 இனையுடைய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். நியமனத் திகதி முதல் மூன்று வருடங்களினுள் அலுவலக உதவியாளர் சேவையின் தரம் III இற்குரிய வினைத்திறன்காண் தடை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

05. முதலாவதாக நியமனம் பெற்ற சேவை நிலையத்தில் ஆகக் குறைந்தது 03 வருடகாலம் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் சிறப்புக் காரணங்களின் அடிப்படையில் அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் யாதேனும் ஒரு அலுவலரை மாற்றத் தேவைப்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

06. இக்கடிதம் கிடைக்கப்பெற்றதாகவும், இங்குள்ள குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி, தாங்கள் இந்தப் பதவியை பொறுப்பேற்று இரண்டு வாரங்களினுள் எனக்கு அறியத்தரவும். நியாயமான காரணங்கள் எதுவுமின்றி நீர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கடமையை பொறுப்பேற்கத் தவறும்பட்சத்தில் இந்நியமனம் இரத்தாகிவிடும்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

அமைச்சு/திணைக்களத் தலைவரின்

ஒப்பம்

பதவி முத்திரை :-

பிரதி :- இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**<u>பலநோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள பயிற்சி பெற்ற பலநோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர்களுக்கு இலக்கம் அமப/23/0160/605/012 மற்றும் 2023.02.07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அலுவலக உதவியாளர் சேவையில் நிரந்தர நியமனத்திற்கான தகவல்களைப் பெறுதல்.</u>**

01. பெயர்: ..........................................................................................

02. தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ☐

03. ஊழியர், பலநோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் கீழ் பலநோக்குஅபிவிருத்தி அலுவலக உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ☐

நியமனத் திகதி | Y | Y | Y | Y | M | M | D | D | மற்றும் பதவி ......................................

04. NVQ 3 பயிற்சியை நிறைவு செய்துள்ளீரா? ஆம் ☐ இல்லை ☐

05. பலநோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர் பதவியில் 02 வருட பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ளீரா? ஆம் ☐ இல்லை ☐

06. நிரந்தர நியமனம் வழங்க உத்தேசிக்கப்பட்ட திகதிக்கு 45 வயதினை விட மேற்படவில்லை என? ஆம் ☐ இல்லை ☐

07. பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

பிறந்த திகதி ….......….. தேசிய அடையாள அட்டை ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

நிரந்தர பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் சந்தர்ப்பத்தில் ............. ஆந் திகதிக்கு வயது ...........................

08. கல்விச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்திய பிரதி

09. மாணவர் செயலாற்றுகைப் படிவத்தின் படி :- தரம் 8 /தரம் 9 இல் சித்தியெய்துள்ளீரா? ஆம் ☐ இல்லை ☐

சித்தியெய்திய பாடசாலை :- ........................

10. சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதல்களில் உள்ள பெயரில் மாற்றங்கள் இருப்பின் அதற்கான சத்தியவோலை

சத்தியக்கூற்று (இணைக்கப்பட்டுள்ளது ) ஆம் ☐ இல்லை ☐

11. ஆட்சேர்ப்பு 2022.12.31 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி வரையறைக்குள் உள்ளதா? ஆம் ☐ இல்லை ☐

12. ஆட்சேர்ப்பு, அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

ஆம் இல்லை

இலக்கம் අමප/23/0160/605/012 மற்றும் 2023.02.07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் இலக்கம் PSC/EST/03-01-01/01/2022 மற்றும் 2023.04.10 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் / பூர்த்தி செய்யவில்லை என தனிப்பட்டவகையில் பரீட்சித்துப் பார்த்து திருப்தியடைவீராயின் ...................................... ஆந் திகதிக்கு இணைந்த அலுவலக உதவியாளர் சேவையின் ( .................................................) பதவிக்கு நியமனம் செய்ய பரிந்துரைக்கிறேன் / பரிந்துரைகவில்லை.

..............................
..............................

திணைக்களத் தலைவரின் பரிந்துரை

..............................
..............................

அமைச்சின் செயலாளரின் பரிந்துரை

**இணைப்பு 03**

**<u>பலநோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள பயிற்சி பெற்ற பலநோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர்களுக்கு இலக்கம் அமப/23/0160/605/012 மற்றும் 2023.02.07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அலுவலக உதவியாளர் சேவையில் நிரந்தர நியமனத்திற்கான தகவல்களைப் பெறுதல் .</u>**

1. பதிவாளர் நாயகத்தினால் சான்றுப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட பிறப்பத்தாட்சிப் பத்திரத்தை திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்திய பிரதி
2. தேசிய அடையாள அட்டையில் திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
3. மாணவர் செயலாற்றுகைப் படிவத்தை திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
4. க.பொ.த. சா/தரப் பெறுபேற்று ஆவணத்தில் திணைக்களத் தலைவரினால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ( தோற்றியிருப்பின் மாத்திரம்)
5. பலநோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் கீழ் பலநோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி
6. பலநோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம் அல்லது பயிற்சி பெற்ற திணைக்களத்தினால் வழங்கப்பட்ட, பலநோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர் பதவியில் குறைந்தபட்சம் 06 மாதங்கள் தொடர்ச்சியாக மற்றும் முறைசார்ந்த பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்துள்ள சான்றிதழ்
7. NVQ 3 பயிற்சியை நிறைவு செய்ததற்கான சான்றிதழ்
8. சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதல்களில் உள்ள பெயரில் மாற்றங்கள் இருப்பின் அதற்கான சத்தியவோலை
9. நேர்முகப் பரீட்சைக் குழு அறிக்கையின் சான்றுப்படுத்திய பிரதி
10. தங்களால் வெளியிடப்பட்டுள்ள தற்காலிக நியமனத்தில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பிரதி

11. மேற்படி தற்காலிக நியமனத்தின் ( இணைப்பு 01) படி உத்தியோகத்தர் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்ட கடிதம் ( 5 ஆம் பின்னிணைப்பின் பிரகாரம்)

12. ஆட்சேர்ப்பு, 2022.12.31 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லையினுள் இருப்பதாக உறுதிப்படுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பதவிகள் அங்கீகாரக் கடிதத்தின் பிரதி

13. அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால் தங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கான அனுமதியை வழங்கும் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

14. திணைக்களத் தலைவரின் பரிந்துரை

15. அமைச்சின் செயலாளரின் பரிந்துரை